காவியம்

ஆசிரியர்: சுரதா

(கவிதை வார இதழ்)

சுவடி 1: ஏடு 13 | சென்னை: திருவள்ளுவராண்டு, 1987, மாசி 19 2—3—56 | விலை அணா 1

செங்கோட்டையில் - கேரளம், கணக்கெடுக்கிறது!

சென்னை அரசினர் சொன்னதின் பேரில்—
காம ராசரின் சம்மதத் துடனே,
செங்கோட் டைதனில், தேங்காய் மூடிபோல்,
பாதி தரப்படும்—கேரளத் திற்கு,
என்று தீர்ப்பு வழங்கிற் றல்லவா?
நான்சென்ஸ் நேரு நடத்தும் சர்க்கார்!

டில்லி - சொல்லித்தான் செய்கிறார்களாம்!

பிடிவாதத் தீர்ப்பு பிப்ரவரி இருபதில்
என்ன ஆயிற்று? இங்குள தமிழர்கள்
அனைவரும் எதிர்த்தோம். அதனைக் கண்டு.
டில்லி நடுஅரசு திடுக்கிட்டு—இதுபற்றிக்
கருத்தைச் செலுத்திக் கொண்டுள போதே;
திரு-கொச்சி சர்க்கார், செங்கோட்டை தன்னில்,
தங்கட் கெவ்வளவு தமிழ ரின்நிலம்
சேர்ந்திட வேண்டும் என்னும் கணக்கைத்
தயாரித்து அதனைத் தந்திருக் கின்றனர்!

59 - சதுர மைல் அவர்கட்காம்!

நூற்று இருபத்து ஒன்பது சதுர
மைல்பரப் புள்ள வட்டம் தன்னில்,
ஐம்பத் தொன்பது சதுர மைல்நீளம்
கேரளர்க் குரிய பகுதியாம்! தமிழர்
தாரை வார்த்துத் தந்திட வேண்டுமாம்!
டில்லி சர்க்கார் உத்தரவுப் படிதான்
திரு-கொச்சி சர்க்கார் 'சர்வே' குழுவை
அனுப்பி வைத்ததாம் அளந்து கணக்கிட!
கண்போன்ற நமது மண்ணின் பகுதியை
அவர்களதென்று அளந்திடும் போது,
பாது காப்புப் படையொடு
பட்டாளம் நின்றதாம் அவர்பக் கத்திலே!

★

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)......

காட்சிதந்த கனகம்

உண்மை ஒளியான்

மாங்குயில் கூவுஞ் சோலை மறுபுற மிருக்கக்கண்ட
ஓங்கிய காதல் மிக்க வொளியுடை விமலன் தானும்
பங்குடை யோலை தன்னைப் பரிவுடன் எழுதி மாலை
நீங்காது வருக வென்று நீட்டியே சென்று விட்டான்.

பெற்றநல் லோலை கண்டு பெருமகிழ் வுற்ற நங்கை
வெற்றிசால் மாலை தன்னை விருப்புடன் நோக்கி நின்று
உற்றநல் மனையைவிட்டு ஒருவரு மறியா வண்ணம்
மற்றவர் தனையும் நீங்கி மாங்குயில் சோலை புக்காள்.

கனகத்து வரவையெண்ணிக் காத்துமே நின்ற செல்வன்
மனமொத்த நங்கை தன்னை வாவென வாழ்த்துக்கூறி
இனமொத்த வாழ்க்கை பற்றி இருவரு மெடுத்துப்பேசித்
தினமிங்கு காண்ப லென்று தேறியே பிரிந்து சென்றார்.

ஒவ்வொரு நாளு மன்னார் ஒழிந்தநல் மாலை நேரம்
செவ்விய முறையிற்காதல் சிறப்புட னனுபவித்தார்.
அவ்விய நெஞ்சத்தார்கள் அழிசெயல் செய்திட்டாலும்
ஒல்விய் காதலென்றும் உயர்வுடன் வாழ்தல் உண்மை.

இங்குவிவ் வாறாய்க் காதல் இன்பமாய் நடக்கும் நாளில்
மங்கைக்கு மணமுடிக்க மற்றவர் பலருஞ் சேர்ந்தார்
அங்கங்கள் துடிக்க லுற்ற அறிவுடைக் கனக மென்பாள்
பங்கமில் விமல னுக்கே பரிவுட னெடுத்துச் சொன்னாள்.

சுற்றத்தார் பலருஞ் சேர்ந்து சோதிடந்தனையு மாய்ந்து
மற்றவ ரறியும் வண்ணம் மணாளனைத் தேர்ந் தெடுத்தார்
பற்றினை விமலன் பதித்தநல் கனகந் தானும்
சுற்றமே அழிக வென்று சூழ்ச்சியாய் வெளியேறிட்டாள்.

இந்தவோர் நிலையைக் கேட்ட வெழுச்சிசால் விமலன் தானும்
வந்தேனென்று சொல்லி வழிதனை யெண்ணிப் பார்த்து
இந்தநல் லுறவை நீங்கி இளந்தமிழ்க் காதற்காகச்
சொந்தநல் லூரை விட்டுச் சொல்லாது புறப்பட்டார்கள்.

உண்மையை யுணரா மக்கள் ஊரெல்லா உறைக்கூடும்
திண்மைசால் காதல் வீரர் திறமையாய் வாழ்ந்திட்டார்கள்
பெண்மையை யிகழ்ந்தால் நாட்டில் பிறங்கிட வழியுமில்லை
வண்மையாய் நாளுமிந்த வாழ்க்கைக்குத்துணை செய்வீரே!

பெற்றோர்கள் மக்கட்காகப் பிழையுடை மணத்தை நாடும்
இற்றைநாள் வழக்கம் நீங்கி இளந்தமிழ்க் காதல் வீரர்
வெற்றிசால் நோக்கத் தோடுவிருப்புடன் தேருங் காதல்
உற்றுமே நாட்டிலென்றும் ஒளிபெறும் நாளெந் நாளோ?

முருகிற் சிவந்த கழுநீரும்
முதிரா விளைஞ ராருயிரும்
திருகிச் செருகுங் குழன்மடவீர்
செம்பொற் கபாடந் திறமினோ.
—கலிங்கத்துப் பரணி (கடை திறப்பு)

இதயம்

சென்னை 2—3—56 வெள்ளி

ஆனாலும், நல்லவராம்!

குல்லாய் நேரு கூறினார்!

“முழுக்க முழுக்கத்” தவறாக வேநான்
நடந்துகொண் டிருக்கலாம்! நான்அறி வித்த
அந்தத் ‘தீர்ப்பை’ அமுல்செய் வதற்குத்
திண்ணமாய்ப் போரிட்டுத் தீருவேன் நிச்சயம்!
இவ்விதம் அமிர்த சரசில், காந்திக்
குல்லாய் நேரு கூறிய பின்னரும்
நமது பண்டித நேரு அவர்கள்
மக்களின் கருத்தை மதித்து நடப்பவர்
என்கிறார் காம இராசர் நம்மிடம்!

டில்லிக் காவடி சொல்கிறார் இப்படி!

மக்கள் ஒப்பிட மறுக்கும் எதனையும்
நிர்ப்பந்தப் படுத்த மாட்டாராம் நேரு!

இன்னும் ஒருபடி மேலே செல்கிறார்
பண்டிதர் குணத்தைப் பறைசாற் றும்இவர்.

பதவிக் கனவு—இல்லை — — — — பகற்கனவு!

ஆச்சாரி யாநீர்? அல்லது பந்த்தா?
பெரும்ப தவியாவும் வடவர்க்கே குத்தகை
இதனை அறிந்தும் ஏனிந்த ஆசை.
ஐயோ பாவம்! ‘கனமே’
அவலை நினைத்து வாயைமெல் கிறீரே!

தலைமைக் கழகம்: அறிக்கை—4/56

நன்றி தெரிவிப்பு

சென்னையில் அமைந்த சர்வகட்சிக் கூட்டணியின் வேண்டுகோளுக்கிணங்க, பிப். 20-ம் நாள் தமிழ்நாடு எங்கணும் பொதுவேலை நிறுத்தத்தையும், கடையடைப்பையும் மிகச் சிறப்பாகவும், வெற்றிகரமாகவும், அமைதிமாகவும் நிறைவேற்றித் தந்த பொது மக்கள் அனைவர்க்கும், சர்வ கட்சிகளையும் சேர்ந்த தோழர்களுக்கும், கூட்டணியின் ஒரு உறுப்பாக அமைந்துள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அதன் பொதுச் செயலாளர் என்ற முறையில் என்மனமுவந்த நன்றியறிதலைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

‘அறிவகம்’
சென்னை-13
28-2-1956

இரா நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்.

★ காயல் தந்த

சேறெடுத்து வாஎன்றாள்.’ உடனே, தோழி,
தென்னாட்டுச் சந்தனத்தைக் கொண்டு வந்தாள்.
சோறெடுத்து வாஎன்றாள். செடிஅ ரும்பைத்
தோழிப்பெண் தந்திட்டாள்; இளைத் திருக்கும்
ஆறெங்கே? என்றிட்டாள். அறைக்குள் சென்று,
அருவிநிகர் மேலாடை எடுத்து வந்தாள்.
மீறியெழும் ஆசையொடு; அணங்கே, யாழை
மீட்டென்றாள், பூங்கோதை என்னும் தாசி.

பனிஇரவின் சிறுபொழுதில் சிறிது நேரம்
பாகுதமிழ் இசைபாடி மகிழ்ந்தாள். தோழி,
இனிஎனக்கு வேண்டுவதோ தூக்கம். நீபோய்
ஏற்பாடு செய்என்று எழுந்தாள். பின்னர்க்,
குனிந்ததொரு வில்லெடுத்தப் பாண்டி வேந்தன்
கொலுப்பதுமை போன்ற அவள் உறங்க லானாள்.
மனிதரிலே தரித்திரர்கள் — கள்வர் என்போர்
வந்தார்கள் வீட்டுக்குள், கன்னம் வைத்தே.

சோலைதரும் நீலமலர் அழகு மங்கை,
சோர்ந்ததொரு மலர்போலக் கிடந்தாள். வண்ணச்
சேலையொடு மேலாடை, கூந்தல் யாதும்,
சிறிதேனும்அன்றிரவு கலைய வில்லை!
காலடியை மெதுவாக ஊன்றி, சத்தங்
காட்டாது ஓர்கள்வன் மஞ்சம் வந்து,
கூவிஉடல் பூங்கோதை தனை எழுப்பிக்
கூர்வாளை முன்காட்டி மிரட்டி நின்றான்.

வட்டவடி வானபொருள் தந்தால், வீட்டில்
வரவேற்று, உடல்ஒட்டச் சம்ம திக்கும்,
பொட்டழகி, பொய்வசனக் காரி தன்னைப்,
பொட்டலத்து மார்பின்கீழ் கயிறு கொண்டு
கட்டிவைத்தார் யானைக்கால் தூணில்; பின்னர்க்
களவாடல்—அதுதீர்ந்து திரும்பும் போது,
கட்டுண்ட பூங்கோதை கனிஉ தட்டில்,
காசுதரா மல்முத்தம் இட்டுச் சென்றார்.

கொத்துமல ரே! கனியே! உனக்கு என்னைக்
கொடுத்திட்டேன் எனக்கூறி, இதழில் முத்தம்
வைத்திடுமுன் என்கரத்தில் மின்னும் பொன்னை
வைத்திடுவர் இதுநாளும். இன்றோ, செல்வச்
சத்துமுழு தும்இழந்தேன். இலவ சத்தில்,
சாறெடுத்தும் சென்றார்கள் உதட்டில்; என்று,
மெத்தைமுழு தும்நனைய அழுதாள்; கண்ணீர்
வேதனையை அவ்வீட்டார் குறைத்து வந்தார்.

இரவினிலே, இல்லத்தில் மழையை—மங்கை
இருவிழியும் பெய்வதனைக் கண்டு, அங்கே
வருபவர்கள் ஏதேதோ உரைத்தும்; கேட்க
வனிதைக்கு அப்போது காதே இல்லை.
இருள்வைத்து இருந்திட்ட அவ்வூர்; மக்கள்
எதிர்வைத்துக் காட்டிற்று நெருப்பு வெய்யில்.
பரிதாப நடையோடு, முக்கா டிட்டுப்
பரத்தைப்பெண் நீர்வடித்து நடந்து சென்றாள்,

சீதநிலா முன்புறத்தில் சிரிப்பு இல்லை,
சிந்தும்மழைப் பின்புறத்தில் அரும்பு இல்லை.
மாதுளம்பூ வாயிதழில் விரிவு இல்லை.
வதனத்தில் வட்டமிடும் பொட்டு இல்லை.
காதினிலே தோடில்லை. சேர்த்த ணைக்கும்
கரந்தன்னிலே சரிவதற்கு வளையல் இல்லை.
பாதத்தில் கண்ணகியின் நகைகள் இல்லை;
பாட்டில்லை அதனாலே, நடந்த போது!

காக்கை பாடினி

ஓரிரவில் ஆயிரம்பாட் டெழுதும் சக்தி
உள்ளபெரும் புலவர்களின் முன்அ மர்ந்து,
பேரறிஞன்; கொடைவள்ளல்; சீதக் காதி;
பேசிய, தன் பேச்சுதனை முடிக்கும் போது;
ஈரமுகம் தனைக் காட்டி, வழங்கும் வள்ளல்
எதிர்நின்றாள் பூங்கோதை. அன்னோன் பார்த்து,
ஆரம்மா நீ என்றான்? கவிதை யாலே
அழகுமகள் பதில்கூறத் தொடங்கி விட்டாள்.

புதுப்புனலும் பூங்குழையார் நட்பும்—என்னும்
பொருளுடைய பாட்டுக்குத் தலைவி என்றாள்.
நிதிக்காகச் சிரிப்பவளோ என்று, அந்த
நீலவிழிப் பூங்கோதை தன்னைக் கேட்டான்.
அதுவேதான் எனதுதொழில். என்போன் றோர்க்கு
அங்கந்தான் மூலதனம், என்று ரைத்தாள்.
எதற்காக அழுகின்றாய் பெண்ணே? என்று
இசைகேட்டு வசமாகும் வள்ளல் கேட்டான்.

தனத்தின்மேல் மனம்வைத்து வந்தால், என்சந்
தனத்தின்மேல் கைவைத்துக் கொடுத்து; வந்தோர்
தனத்தின்மேல் கைவைப்பேன். இதுவே என்றும்
தவறாத வாடிக்கை; இன்றோ, எந்தன்
தனத்தின்மேல் கைவைத்து விட்டார் கள்வர்,
சபையோரே! என்செய்வேன் என்றாள். பொன்ஆ
தனத்தின்மேல் இருந்திட்டோர், இதனைக் கேட்டுச்
சரிதானே அவர்செய்கை, அதற்கேன் கண்ணீர்?

உன்பேச்சுப் படிபார்த்தால், இரவில் வந்தோர்,
ஒருகூடைப் பொன்கொட்டிக் கொடுத் திருப்பர்.
கன்னத்தைத் தந்திருப்பாய். பின்னர், மற்றக்
காரியமும் வழக்கம்போல் நடந்தி ருக்கும்
மின்னுகின்ற பொன்பெற்ற பின்னர், முல்லை
மலர் சிரிப்புத் தரவேண்டும் உதட்டில்? நீயோ,
கன்னத்தில் நீர்க்கோடு, குரலில் துக்கம்
காட்டுகிறாய், இதுமிகவும் வியப்பே—என்றார்.

பெரியோரே! புலவோரே! முதிர்ந்த கல்விப்
பேச்சறிந்த சபையோரே! கள்வர் கூட்டம்,
வருமானப் பொருள்தந்து இருந்தால், எந்தன்
வரிவிழியில் நீர்வருமா? வருந்து வேனா?
உரிமையுள என்பொருளை; கொலைக்கூட் டத்தால்
ஊர்தூங்கும் இரவினிலே இழந்தேன். அந்தோ!
பொருளற்றேன். நீர்சாய்ந்த குடம்போல் ஆனேன்.
பொய்யில்லை; உண்மை இது என்று ரைத்தாள்.

மாங்காயின் ஆரம்பப் பருவ மான,
வயதாகாச் சிறுபிஞ்சு விழிப டைத்த
பூங்கோதை, புலவர்சபை தன்னில், தந்த
பொருள் தேங்கும் கவிதைபதில் தன்னைக் கேட்டுத்
தாங்காத மகிழ்ச்சியொடு வள்ளல்; பொன்னைத்
தந்திடுக இவள்பாட்டுத் தமிழுக் கென்றான்.
நீங்கிற்று அவள்விழிநீர்; புன்சி ரிப்பு,
நிலவிற்று, வாயிதழில்! பொன்னைக் கண்டு.

நீமிகவும் பேரழகி! இதனை, வீட்டின்
நீள்சதுரக் கண்ணாடி உனக்குக் கூறும்.
பூமியிலே நல்லொழுக்கம் உடையோர்—உன்னைப்
பொருள்கேட்கும் சிலையென்பர். பரத்தை என்பர்.
காமுகரோ, முத்தமிடும் உதடு தன்னைக்
கற்கண்டு கனிச்சாறு கரும்பு என்பர்.
நாமிங்கு, உன்னைப்போற்றிப் புகழு தற்கு
நற்றமிழின் திறனன்றி மற்றொன் றில்லை.

அழகில்லை யாஎனக்கு? என்று கேட்பாய்,
அழகிருந்து என்னபயன், கற்பில் லாமல்,
பிழைசெய்து வாழ்பவள்நீ. இரவில், எச்சில்
பெருக்குகின்ற தொழில்புரியும் பரத்தை, காகம்
கிழிக்கின்ற வாழையிலை, என்று ரைத்தான்.
கெண்டைவிழி மங்கைஇதைக் கேட்டு, என்னைப்
பழிக்காதீர். இதுபோதும். கெட்டேன்! கெட்டேன்!
பாரினிலே இழிச்சொல்லைப் பெற்றேன்! பெற்றேன்!

இரும்படிக்கும் கொல்லர்களின் உலைக்க ளத்தில்
இருக்கின்ற பழங்காலத் துருத்தி போன்று,
உருவுடைய நாரைகளும், கொக்கும், சேர்ந்து
உயிர்வாழும் குருகூரில், குடவர் என்னும்
பெரியாரின் இல்லத்தில், பன்னீ ராண்டு
பைந்தமிழைக் குறைதீரக் கற்றுத் தேர்ந்தேன்.
வரிநான்காம் நாலடியும், அதனில் பாதி
வரியுடைய திருக்குறளும் படித்தும் கெட்டேன்.

அகலிகைபோல் வாழ்வினிலே கற்பி ழந்தேன்.
ஐவர்க்கும் ஓர்போர்வை போலி ருந்து,
சுகங்கண்ட பாஞ்சாலி போலக் கெட்டேன்.
சூரியகா லத்தில்ஒரு குந்தி யானேன்.
செகமெங்கும் இழிவாகப் பேச, சீதைச்
செயல்புரிந்து நான்சேறு ஆகி விட்டேன்.
முகங்காட்டக் கூடாத எனக்கு, இந்த
முக்காடு ஓர்கற்பா? என் றெடுத்தாள்.

விழிக்குள்ளே கடல்வண்ணம் உடைய பெண்ணே!
விற்காதே இனிமேலும் உடலை, சென்ற
வழிதவறு. அதனாலே எடுத்துரைத்தேன்.
வருந்தாதே திருந்திக்கொள். நீயோ கல்விச்
செழிப்புள்ள நெஞ்சத்தாள் இந்த நாட்டைச்
சீர்த்திருத்தப் பாடுபடு. உயிரைப் போன்ற
மொழிக்கெங்கே உன்சேவை? தமிழுக் காக
மூச்சறுந்து போகும்வரை தொண்டு செய்க!

அணிஇலக்க ணம்ஒன்று எழுதி, நாட்டுக்
களித்திடுக, எளிய தமிழ்ச் சொல்லால் — என்றான்.
தணியாத தமிழ்ப்பற்று உடைய தாசி,
சம்மதத்தைத் தன்சொந்தத் தலையால் தந்தாள்.
பணக்காரத் தனங்காட்டும் இந்தக் காயல்
பட்டினத்தின் வரலாற்றைச்; சங்க நூலுக்
கிணையாக நீயெழுதி வழங்க வேண்டும்
என்றிட்டான், கொடைவள்ளல், ஒப்பம் தந்தாள்.

அந்த பெருங் காவியத்தைக் குறித்து, இங்கே
அறிஞர்களின் முன்னிலையில் இரண்டோர் வார்த்தை;
தந்திரங்கள் செய்துவரும் ராமன் நாட்டோர்
தத்துவங்கள் ஒட்டுவதைவெட்டல் வேண்டும்.
சிந்திக்கத் தூண்டட்டும் உன்நூல் என்றான்.
சித்திரத்து அழகுடையாள், அவனை நோக்கி,
மந்திரமோ, கடவுள்இது எனவிளக்க
மரப்பாச்சி நூல்நினைவோ, தரவே மாட்டேன்.

பாய்வார்த்தைப் பார்ப்பானின் பேச்சை நம்பிப்
பாழாகும் தமிழர்களைத் திருத்தும்; நாட்டைச்
சாய்த்துவரும் கொள்கைதனை எனது ஏடு
தணல்மீது நிச்சயமாய்த் தள்ளும்; நானும்
காய்மாற்றும் கனியாவேன்; அறிஞர் போற்றும்
"காக்கைப்பா டினி" யாவேன் என்றாள். அந்த
வாய்ஓசை தனைக்கேட்டுச் சபையில் உள்ளோர்
வண்டிருந்த பூவேநீ வாழ்க என்றார்.

சுரதா

கவிதைகள் சந்திக்கின்றன!

★ பெருமணல் உலகில், அன்றிப்
பிறிதொரு உலகில், இன்பம்
இருப்பதாய் எண்ணு வோர்க்கு
இவர்தரும் கவிதை எண்ணம்,
கருப்பொருள்! அன்னூர்க் கெல்லாம்
கட்டாயம் மனம ருந்து!
கருத்துள கவிதை! இந்தக்
கரும்பினைச் சுவைத்துப் பாரீர்

—ஆ-ர்.

இன்பம் இருக்குமிடம்?

அங்கே இன்பம் உண்டென்று
அலைந்து தேடித் திரிகின்றூர்
எங்கும் புவியில் காணுமல்
ஏங்கி ஏங்கி வாடுகின்றூர்.

கண்ணில் காணுக் காட்சிகளை
கணக்கில் கொண்டு சேர்க்கின்றூர்
விண்ணில் தோன்றும் விந்தையெலாம்
விரைவில் நாட விழைகின்றூர்.

மண்ணில் மாயும் பொருள்களிலே
மனதிற் கின்பம் தோன்றுதடா!
எண்ணில் விந்தை எத்தனையோ
இயற்கை இன்பம் சேர்க்குதடா!

அழகு முல்லைப் பூவினிலே
அன்புச் சிரிப்பு தோன்றுதடா!
மழலை மொழியின் பேச்சினிலே
மனதிற் கின்பம் தழைக்குதடா!

சங்கத் தமிழ்நூல் ஏட்டினிலே
சந்தத் தோடு இன்னிசையும்
எங்கும் பாய்ந்தே ஓடுதடா!
இன்பத் தமிழன் மொழிதனிலே!

—அ. சீனிவாசன், B. A., மதுரை.

●

★ நல்லிலக் கியங்கள் நாட்டிற் களிப்பீர்!
பகுத்தறி வுதனைப் பரப்புவீர் யாண்டும்!
-என்று உரைக்கிறுர் இளைஞர் கட்கு;
தவத்திரு சாந்த லிங்க அடிகளார்
தமிழ்க்கல் லூரி தனிலே, புலவர்
இடைநிலை வகுப்பில் பயின்றிடும்
இந்த இளைஞர்தன் சொந்தப் பாட்டிலே!

—ஆ-ர்.

இளைஞர் கடன்

நன்மை ஓங்கி நாடு நலனுறத்
தென்மொழி என்றும் சீருடன் விளங்க
நல்வினை ஞர்பலர் நாளுந் தோன்றி
"வினையே ஆடவர்க் குயிரே" எனுந்தமிழ்த்
தொன்மொழி உணர்ந்து தூயவாழ் வெய்திடும்
நன்னிலை அவர்தம் நாட்ட மாகுக!

எவர்எதை இயம்பினும் ஆய்ந்து ஏற்றுப்
பகுத்தறி வதனை எங்கும் பரப்புக!
நற்கலை பலவும் நற்தமிழ் ஏற்றிடப்
பற்பல இலக்கியம் பாங்குற அமைக்க!
எண்ணருங் கலைச்சொல் இயற்றித்
துன்னருஞ் சீர்த்தி துலங்கி ச் செய்தே.

—எழில்நிலவன், கோவை.

●

★ கன்னி ஒருத்தி—'களுக்கெனச் சிரித்தாள்,
என்று முடியும் இந்தக் கவிதையைச்,
சந்த நயத்தொடு தந்துளார்,
பத்து வரிகளில்; படித்திடு வீரே!

—ஆ-ர்.

முகமோ? முழுமதியோ?

சடையொடு இடையும் நடையொடு துவளப்
பெடையன மன்ன நடையிடை யசைந்தே
இடையிடை இடுக்கிய குடமொடு கொணர
மடைத்தலை நண்ணிய மடமயில் அனையாள்
காரன்னக் குழலாள் கயலன்ன விழியாள்
முகமது மதியென மரைமலர் எண்ணி
அகமது நொந்தே அஃக ஆங்கே
மதுவுண்டு மயங்கிய வண்டு மருண்டு
உதுமென எழுந்து கடிதா யேகக்
கண்ட கன்னியுங் 'களுக்'கெனச் சிரித்தனளே!

—காரைநாதன்.

★ ஈரசைச் சீரில் இவர்தந் திருக்கும்
மாலைக் காட்சி வருணனை அகவல்,
தேவை தெரிந்து, தெளிந்து, அதன்பின்
எளிய வாழ்வு நடத்துவோன்
போன்று உள்ளது, புரிந்த நடையிலே!

—ஆ-ர்.

மாலைக் காட்சி!

மறைந்திடப் பகலவன் விரைந்தனன்; வாழ்வைத்
துறந்திடும் ஞானியாய் பறந்தனன் மேற்கே!
கணத்தினில் தோன்றி மனத்தினைக் கவர்ந்திடும்
செவ்வொளி உலகைக் கவ்விடும் அழகே!

மாருதம் உலவிடும் மாலையில், பாடும்
புள்ளினம் களிக்கத், தெள்ளிய நீர்ஒளி
பட்டுத் தெறிக்கப், பலநிறங் காட்டச்
சாற்றெணு வாசம் காற்றுடன் வீசும்!

அலர்ந்திடும் அலரியில் கமழ்ந்திடும் மணமும்
உலர்ந்திடு முளத்தினில் உவகையை ஊட்டும்
சோர்வு நீங்கிட ஆர்வம்
பொங்கிடச் செய்யும் மங்கல மாலையே!

—முத்தமிழரசன், கண்டரமாணிக்கம்.

●

★ வடித்த சோறு போல் வாய்விரிந் துள்ள,
தேன்மல ரிடத்தில் சிற்சில கேள்விகள்
அன்பர் கேட்கிறுர்; அது இது! இந்தப்
—பாட்டுச் சுவையின் பயன்பெறு வீரே!

—ஆ-ர்.

ஏனோ?

மலரினமே, மலரினமே மாசற்ற மலரினமே
நிலமடந்தை நீள்வயிற்றில் நீயுதித்தா யானாலும்,
பலரகத்தில் பாரினிலே பலப்பலவாய்பரந்திருந்தும்
சிலரகத்தில் மட்டுமந்த சிரிக்கின்ற மணமேனோ?

பார்மீது வாழ்கின்ற பாவையர்கள் தம்முடைய
கார்கூந்தல் மீதேறி களித்திருக்கும் மலரினமே,
சீர்பெற்ற சிலமணியில் செம்மலர்காள் செயலிழந்து
வேர்அற்ற மரமெனவே வீழ்ந்தேநீர் வாடுவதேன்?

புத்தம் புதுமலரே பொன்மலரே பொன்வண்டு
நித்தம் வந்துவந்து நின்னின்ப தேன்பருகி
சித்தம் களித்திடவே சிங்காரப் பண்பாடி
முத்தம் இட்டுசென்றும் முகம்வாடிப் போவதுஏன்?

மல்லிகை மலரினமே மற்றுமுள மலரினமே
தல்லியமாய் வானில் தோன்றி மறைகின்ற
அல்லியின் காதலனும் அம்புலியாய் முகம்கொண்ட
மெல்லியரின் மென்னுடலை மேதினியில்
கொண்டதேனோ?

—சா. ராமானுசம், இரட்டணை.

●

★ உதட்டின் மதுவை ஓவ்வொரு நாளும்,
தனிமையில் கொடுக்கும் தையல் ஒருத்தியின்
சந்திப்பு நேரச் சம்பவச் செயலைக்,
கொஞ்சம் தந்துளார், நெஞ்சை இழுக்கவே!

—ஆ-ர்.

காதலியிடம் காண்பது?

காலையிலே, சாலையிலே
கடைக்கண்ணுல் பார்த்திடுவாள்!
மாலையிலே சோலையிலே
மகிழ்ந்தாடி வந்திடுவாள்!

தரையிலே செடியிலே
மலர்கண்டு சிரித்திடுவாள்!
தலையிலே சூடுகையில்
என்னைக்கண்டு மகிழ்ந்திடுவாள்!

தமிழிலே, தனிமையிலே
பேசிப்பூ ரித்திடுவாள்!
அணைப்பிலே, விரிப்பிலே,
வாய்முத்தம் தந்திடுவாள்!

இனிப்பிலே சுகத்திலே
உலகை மறந்திடுவாள்!
எனைப்பிரியும் பொழுதினிலே
ஏக்கத்தைக் காட்டிடுவாள்!

—இலகோ. இராமநாதன், கண்டமங்கலம்.

★ என்னைப் போல நீயும் ஒருத்தி-
இரண்டு பேரும் அழுது அழுது-
என்று ஒருத்தியை இந்தக் கவிஞர்.
அழுதிட வைக்கிறுர்—அலைகடல் அருகிலே!

—ஆ-ர்.

அவளும், அலையும்

இரையும் கடல் மாலையிலே
எழுந்தெழுந்து ஓதமென்னும்
சிரம் உயர்த்தி நோக்குவது
சென்று மீள்வேன் என்று சொன்ன
அன்பன் தன்னையோ?—அடையும்
துன்பம் என்ன வோ?

விலை உயர்ந்த முத்து பவழம்
வேண்டும் அளவு உவந்தளித்த
கலை மானின் மீது வானில்
கவின் ஒளிரும் நிலவு இன்னும்
காணவில்லையோ?—நமது
நாணம் தொல்லையோ?

தொட்டு கரையின் பாதத் தூளை
தூய அன்பு கூறச் சொல்லி
விட்டு அலையை முயன்ற தெல்லாம்
விழலுக் கிறைத்த நீரைப் போல
விரயமா னதோ?—காதல்
கரைய லானதோ?

என்னைப் போல நீயொருத்தி
இரண்டு பேரும் அழுதழுது
கண்ணில் வழியும் நீர் கரிக்க
கண்டபலன் ஏக்கம் என்று
பாக்கள் பாடுதே!—இந்த
யாக்கை வாடு தே!

நில வெழுந்தான் அலைகடலே!
நின்னுடலின் தன்னிருந்தே;
சிலை நிகர்த்தான் எனையும் சேர்ந்த
செய்தியைப் பாடி ஆடிடவே
அலைக் கரத்தை நீட்டடி—உந்தன்
திறத்தைக் காட்டடி!

—நக்கீரன், குடந்தை.

●

★ சொற்களின் உறவுத் தொடர்பினுல் வளர்த்துத்
தந்து இருக்கும் இந்தக். கவிதையை
இனித்திடும் தின்பண் டம்என லாமே!

—ஆ-ர்.

மரண ஒப்பந்தம்

காதலி!

காதலரே! காதலித்தேன்; உமது அன்பில்
கட்டுண்டேன்; காதலிலே இன்பம் கண்டேன்!
ஏதமிலா நமதன்பை வெட்டிச் சாய்க்க
ஏதேதோ செய்கின்றூர்! என்னைப் பெற்றோர்;
பேதமதைக் கற்பித்துப் பேதை யென்னைப்
பெட்டகத்தைக் காப்பதுபோல் காக்கின் றூர்கள்,
காதலனே! எனதன்பே! கரும்பின் சாறே!
கண்போன்ற உமைஇனிநான் காண்ப தெப்போ?

காதலன்!

காதலியே! காதலித்தாய் உனது அன்பைக்
கடல்முத்தின் ஒளியொப்பக் கலந்த ளித்தாய்.
பாதகத்தைச் செய்தோமா? எதற்கிப் பூமி?
பழிதன்னை நம்மீது காட்ட வேண்டும்?
சோதரர்கள் கூடிவிட்டால் காதல் தன்னைச்
சுட்டெரிக்கப் பார்த்திடுவர்; இதுவே உண்மை!
சாதலொரு இன்பந்தான்! சாக்காட்டில் நாம்!
சந்திப்போம்; மறுபடியும் அங்கே வாழ்வோம்!

காமயம்-மு. உலகநாதன், மதுரை.

காவியம்
சந்தா விபரம்

ஆண்டு சந்தா	4—0—0.
ஆறுமாதம்	2—0—0.

ஆசிரியரும், வெளியிடுபவரும்:—சுரதா, 12, படவேட்டம்மன் கோவில் தெரு, சென்னை-12. அச்சிட்டவர்:—D. ரத்தினவேலு, ஸ்ரீ பாரதி பிரஸ், 19, ஆலத்தூர் சுப்பிரமணிய ஆச்சாரி தெரு, சூளை, சென்னை-7